# SENIOR CERTIFICATE EXAMINATION
## *SENIORSERTIFIKAAT-EKSAMEN*

**OCTOBER / NOVEMBER**
***OKTOBER / NOVEMBER***

# 2004

**TAMIL**

**(Second Paper)**

HG **937-1/2**

TAMIL HG: Paper 2

**10 pages**

937 1 2 HG

COPYRIGHT RESERVED / *KOPIEREG VOORBEHOU*
APPROVED BY UMALUSI / *GOEDGEKEUR DEUR UMALUSI*

**GAUTENG DEPARTMENT OF EDUCATION**

**SENIOR CERTIFICATE EXAMINATION**

**TAMIL HG**
**(Second Paper)**

**TIME: 2½ hours**

**MARKS: 140**

## INSTRUCTIONS TO CANDIDATES

**READ THESE INSTRUCTIONS CAREFULLY BEFORE ANSWERING THE QUESTIONS**

1. Answer **ALL** questions.
2. Number your answers exactly as the questions are numbered.
3. Read **ALL** the instructions carefully.
4. Except for the translation into English, **ALL** other questions must be answered in **TAMIL**.

# பகுதி ஒன்று:
# இலக்கணம்

1.1 சரியான விடை எழுதுக:

1.1.1. வினைச் சொல்லாவது யாது? ( 1 )
1.1..2 இரு வகைப்படும் திணை யாவை? (2)
1.1.3 தமிழ் எழுத்துகளின் நான்கு வகைப் பெயர்களை எழுதுக ( 4 )
1.1.4 கீழ் வரும் பெயர்ச்சொற்களுக்கு எடுத்து காட்டு தருக:
1.1.4.1 பொருட் பெயர்: ( 1 )
1.1.4.2 சினைப் பெயர் ( 1 ) (9)

1..2 கீழ்வரும் தொடரிலிருந்து பெயர்ச்சொல், வினைச்சொல், முன்னிலைப்பெயர், பலர் பால் பெயர் ஆகியவற்றை கண்டுபிடித்து எழுதுக:

ஆசிரியர்கள் ஆகிய நீங்கள், நல்ல கவனத்தைக் கவருகிற பாடங்களை கற்பிக்க வேண்டும்.

1..2.1 பெயர்ச்சொல் : ( 1 )
1..2.2 வினைச்சொல் : ( 1 )
1..2.3 முன்னிலைப் பெயர் ( 1 )
1..2.4 பலவின்பால் பெயர்: ( 1 ) ( 4 )

1.3 கீழ் கொடுக்கப் பட்ட சொற்களைக் கொண்டு, பின்வரும் நிறைவு பெறாத வாக்கியங்களை, நிறைவு செய்க

1.3.1 என் தயாருக்கு காது கேட்காத, நடக்க முடியாத இந்தத் தொலை இயக்கி மிகவும் உதவியாக இருக்கும்.
காது கேட்காத, நடக்க முடியாத ______________________________ ( 1 )

1.3.2 இந்த மிகவும் சிறிய பெட்டியை வெளியில் செல்லும்போது நம் சட்டைப் பையில் வைத்து எடுத்துச் செல்லலாம்.

வெளியில் செல்லும்போது ______________________________ ( 1 )
(2)

1.4 கோடிட்ட இடங்களில் ஏற்றக் காலத்தைக் காட்டும் வினைச் சொற்களை எழுதுக:

1.4.1 நிகழ்காலம் : உம்: நான் பாடுகிறேன்.

1.4.1.1 நீ ________________ ( 1 )

1.4.1..2 அவன் ________________ ( 1 )

1.4.2 இறந்தகாலம்: உம்: நான் நீராடினேன்.

1.4.2.1 நீ ________________ ( 1 )

1.4..2.2 அவள் ________________ ( 1 )

1.4.3 எதிர்காலம்: உம்:நான் தமிழில் பேசுவேன்.

1.4.3.1 நீ ________________ ( 1 )

1.4.3.2 அவர்கள் ________________ ( 1 ) ( 6 )

1.5 கீழ்வரும் வாக்கியங்களுக்கு ஏற்ற வேற்றுமை உருபுகளைச்சேர்த்து எழுதுக:

1.5.1 கடையிலிருந்து தங்கை <u>வீடு</u> ஓடினாள் ( 1 )

1.5.2 நான் என் <u>தாத்தா</u> சிங்கப்பூர் சென்றேன். ( 1 )

1.5.3 இந்த <u>மரம்</u> ஓர் அழகான பழம் விழுந்தது ( 1 ) ( 3 )

1.6 சேர்த்து எழுதுக:

1.6.1 அவனுக்கு + கொடு = __________ ( 1 )

1.6..2 கடல் + கரை = __________ ( 1 )

1.6.3 நாடு + கொடி = __________ ( 1 )

1.6.4 ஆடு + கால் = __________ ( 1 ) ( 4 )

1.7 பிரித்து எழுதுக:

1.7.1 இந்தப்பெட்டி = __________ ( 1 )

1.7.2 மாட்டுப்பொங்கல் = __________ ( 1 )

1.7.3 இரண்டாயிரம் = __________ ( 1 )

1.7.4 நூலகம் = __________ ( 1 ) ( 4 )

1.8 எதிர்ச்சொல் தருக:

1.8.1 துன்பம் ( 1 )
1.8.2 சிறுவர்: ( 1 )
1.8.3 உண்டு: ( 1 ) ( 3 )

1.9 ஆண்பரலுக்கு பெண்பால் அமைக்கவும்

1.9.1 நடிகன் ( 1 )
1.9.2 பாடகன் ( 1 )
1.9.3 கிழவன் ( 1 ) ( 3 )

1.10 கீழ்வரும் வாக்கியங்களில் அதே பொருள் தரும் வேரு சொற்களைத் தருக:

உம் : கணடான் = பார்த்தான்

1.10.1 இந்தக் கதையின் கருத்து மணவர்களுக்கு இப்பொழுதுதான் நன்றாக விளங்குகிறது ( 1 )

1.10.2 தேவன் விபத்தில் அடிப்பட்டகுழந்தைகளைப் பார்த்து கண்கலங்கினான்(1)

( 2 )

## பகுதி இரண்டு

2. சுருக்கி எழுதுக:(சுமார் ( 13 - 15 சொற்களுடன்)

2.1

அன்று ஒரு நாள் நான் வேலையிலிருந்து சீக்கிரமாக வீடு வந்துவிட்டேன். என் அறையில் உட்கார்ந்து எதையோ யோசித்துக் கொண்டிருந்தேன். திடீரென்று என் அறைக் கதவு திறந்தது. அவள்தான் – கமலா அறைக்கதவுக்கருகில் நின்று, "நீங்கள் அறையில் இல்லையாக்கும் என்று கதவைத் தட்டாமலே திடீரென்று உள்ளே வந்து விட்டேன் மன்னிக்கவும்" என்று சொல்லித் தன்விரல்களைப் பிசைந்தவாறு ஆடாத, அசையாத தங்கச் சிலை போல தரையைப் பார்த்துக்கொண்டு இருந்தாள்.

( 10 )

## பகுதி மூன்று

3. ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக:

என் நண்பனுடைய வீடு நெருங்கியது. இப்போது மூன்று அறைகளோடு கூடிய புதுவீட்டில் இருந்தான். பள்ளி விடுமுறை அவனுக்கு. அவனுடைய மாமியார் வீட்டுக்குத் தன் மனைவியையும், தன் இரு பிள்ளைகளையும் அனுப்பியிருந்தான். மாமியார் வீடு சற்றுப் பணக்கார வீடு. ஒவ்வொரு பள்ளி விடுமுறைக்கும் பிள்ளைகள் பாட்டியார் வீட்டிற்குச் சென்றுவிட வேண்டும். இல்லாவிட்டால் பாட்டிக்கு இருப்புக் கொள்வதில்லையாம்.

## பகுதி நான்கு

தமிழில் மொழிபெயர்த்து எழுதுக:

4.1 I am at home. ( 1 )

4.2 I am going to school. ( 1 )

4.3 He is coming from the shop.( 1 )

4.4 Grandfather is going to the market. ( 1 )

4.5 In South Africa parents are learning to speak in Tamil. ( 2 )

4.6 I saw his family after ten years. ( 2 ) ( 8 )

## பகுதி ஐந்து

5.1 குயில் பாட்டு:

கீழ் கொடுக்கப்பட்ட குயில் பாட்டின் பின்வரும் வினாக்களுக்கு ஏற்ற விடை தருக:

முன்போல் மறைந்துநின்றேன்; மோகப் பழங்கதையைப்
பொன்போற் குரலும் புதுமின்போல் வார்த்தைகளும்
கொண்டு, குயிலாங்கே கூறுவதாம்: நந்தியே,
பெண்டிர் மனத்தைப் பிடித்திழுக்கும் காந்தமே!
காமனே! மாடாகக் காட்சிதரும் மூர்த்தியே!
பூமியிலே மாடுபோற் பொற்புடைய சாதியுண்டோ?
மானிடருந் தம்முள் வலிமிகுந்த மைந்தர் தமை
மேனியுறுங் காளையென்று மேம்பா டுறப்புகழ்வார்.
காளையர்தம் முள்ளே கனமிகுந்தீர். ஆரியரே!
நீள் முகமும், நிமிர்ந்திருக்குங் கொம்புகளும்,
பஞ்சுப் பொதிபோல் படர்ந்த திருவடிவும்,
மிஞ்சுப் புறச்சுமையும், வீரத் திருவாலும்,
வானத் திடிபோல 'மா'வென் றுறுமுவதும்,
ஈனப் பறவை முதுகின்மிசை ஏறிவிட்டால்
வாலைக் குழைத்து வளைத்தடிக்கும் நேர்மையும் பல்
காலம்நான் கண்டு கடுமோக மெய்திவிட்டேன்.
பார வடிவும் பயிலு முடல்வலியும்
தீர நடையும் சிறப்புமே இல்லாத
சல்லித் துளிப்பறவைச் சாதியிலே நான் பிறந்தேன்.
அல்லும் பகலுநிதம் அற்ப வயிற்றினுக்கே
நாடெல்லாஞ் சுற்றிவந்து காற்றிலே எற்றுண்டு,

5.1.1 குயில் பாட்டை எழுதிய புகழ்பெற்ற கவிஞர் யார் ? (1)

5.1.2 மேற்கொண்ட பகுதியில், ஐந்தாம் வரியில் - "மாடாகக்காட்சிதரும" - என்று சொற்கள் எழுதப்பட்டுள்ளது :

யார் மாடாக மறுபிறப்பில் பிறந்தது? ______________ ( 1 )

5.1.3 இப்பகுதியில் "சல்லித்துளிப்பறவைச் சாதியிலே நான் பிறந்தேன் - என்று எழுதப் பட்டுள்ளது:

யார் பறவையாக பிறந்தது? ________________ ( 1 )

5.1.4 இந்தப் பாட்டை ஏன் "குயில் பாட்டு" என்று கூறுகிறோம்? ( 2 )

5.1.5 தன் மகளின் திருமணந்திற்குச சின்ன குயிலியின் தந்தை என்ன ஏற்பாடு செய்தார்? ( 2 )

5.1.6 சின்னக் குயிலியின் மாமன் மகன் எவவாறு இறந்தான்? ( 1 )

5.1.7 குரங்கனைப்பற்றி 4-5 வரிகள் எழுதுக. ( 5 )

5.1.8 இளவரசனைப்பற்றி 4 - 5 வரிகள் எழுதுக. ( 5) ( 17 )

## 5.2 கொன்றை வேந்தன் விளக்கக் கதைகள்

5.2.1 முடிவு செய்க:

1. அன்னையும் பிதாவும ______________
2. ஈயார் தேட்டைத் ______________
3. ______________கண்ணெனத்தகும்
4. ______________யோரகத் திரு
5. ஏவா மக்கள் ______________
6. கற்பெனப்படுவது. ______________
7. கிட்டா தாயின் ______________
8. கைப்பொருள் தன்னின் ______________ ( 8 )

5.2.2

5.2.2.1 " ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என்ற கொன்றை வேந்தன் தொடரின் பொருள் தரும் ஒரு கதை எழுதுக ( 7 )

5.2.2.2' " கிட்டாதாயின் வெட்டென மற" என்ற தொடரின் பொருளை விளக்கி! எழுதுக. ( 8-10 வரிகள் ) ( 7 ) ( 22)

5.3 தங்கப் பதக்கம்:

கீழ்வரும் பகுதியைப் படித்து பிறகு சரியான விடை ஏழுதுக:

**ஜெகன்:** ஆமாம்மா...ப்த்து ரூபா கொடும்மா.

**லட்சுமி :** எதுக்குடா பணம்

**ஜெகன்:** இன்னைக்கு பரீட்சையில பேப்பருக்கு எல்லா பையன்களும் பத்து ப்த்து ரூபா கொடுக்கணுமுனு எங்க டீச்சர் ச்சர் சொன்னுங்க.

**லட்சுமி :** ஆமா, ரெண்டுநாளைக்கு முன்னுலே ஏதோ புஸ்தகம் வ்ாங்கணும்னு பத்து ரூபா வாங்கிட்டு, போனியே புஸ்தகம்.வாங்குனிய எங்கே பார்ப்போம்

**ஜெகன்:** அ்து...அ்து வந்து, பரீட்சை முடிஞ்ச பிறகுதான் அந்த புத்தகம் கொடுப்பாங்களாம்.

**லட்சுமி:** ஏண்டாஇப்பவேநீ பொய்சொல்ல ஆரம்பிச்சிட்டியா

**ஜெகன்:** என்னம்மா நீ எப்ப பார்த்தாலும் என்னை சந்தேகப் படுற இப்ப நீ பணம். தரப்போறியா? இல்லையா? நீ தரலேனு நான் பள்ளிக்கூடம் போகமாட்டேன்.

**லட்சுமி:** ஏண்டா அப்பா இருக்காருங்கிற பயமே உனக்கு இல்லாம போச்சி.

**ஜெகன்:** என்னம்மா அப்பா அப்பான்னு பயமுறுத்துற— அப்பா—பெரிய இவரு

**லட்சுமி:** டேய் என்னடா சொன்ன உங்க அப்பாகிட்ட சொல்லி நாக்குல சூடுபோட வைக்கிறேன் ராஸ்கல் இந்தாபணம் முளைக்கும்போதே உனக்கு இவ்வளவு திமிரா ராஸ்கல் போடா

5.3.1 மேற்கொண்ட பகுதியில்:

5.3.1.1 ஜெகன் யார்?( 1 )

5.3.1.2 லட்சுமி யார்? ( 1 )

5.3.2 சிறு வயதில் ஜெகன் ஏன் விட்டை விட்டு ஓடி விட்டான்? ( 2 )

5.3.3 இந்த நாடகத்தின் கருத்து என்ன? ( 2 )

5.3.4 மேற்கொண்ட பகுதியில் ஜெகன் பணம் கேட்பதுண்டு - அவன் கொடுகின்ற காரணம் உண்மையா, அல்லது, உண்மை அல்ல வா? ( 1 )

5.3.5 காவல் அதிகாரி சௌதிரியைப்பற்ற 6 - 8 வரிகள் எழுதுக: ( 5 )

5.3.6 லட்சுமையைப்பற்றி 3 - 5 வரிகள் எழுதுக: ( 3 ) ( 15 )

## 5.4 திருக்குறள்

5.4.1 பின்வரும் குறள்களை நிறைவு செய்க

5.4.1.1 ____________________ ஆதி பகவன் முதற்றே உலகு. ( 2 )

5.4.1.2 கற்றதனால் ஆய பயனென்கொல், வாலறிவன் ______________ (2)

5.4.1.3 . ________________ பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு ( 2 )

5.4.1.4 தனக்குவமை இல்லாதான்தாள் சேர்ந்தார்க்கு அல்லால. ____________ ( 2 )

5.4.1.5 ________________ .இறைவன் அடிசேரா தார் ( 2 ) ( 10 )

5.4..2 திருவள்ளுவரைப் பற்றி 10 -12 வரிகள் எழுதுக: ( 10 )

( 20 )

( 7 4 )

**TOTAL MARKS : 140**

END